திருத்தம்

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019/2020

2020, மாச்சு 06 ஆந் திகதிய 2166 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019/2020 இற்கான அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

(i) விண்ணப்பம் கோருவதற்கான முடிவுத் திகதி 2020.07.03 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து விபரங்களும் அவ்வாறே செயல்வலுப்பெறும். தகைமைகளை உறுதி செய்யும் திகதி, மாற்றம் எதுவும் இன்றி 2020.04.06 ஆகக் காணப்படும்.

(ii) மேற்கூறப்பட்ட வர்த்தமான அறிவித்தலின் 6 (இ) ஆம் பந்தியின் "வயது" தொடர்பில் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :

2020, ஏப்பிறல் 06 ஆந் திகதி அன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கமைவாக, விண்ணப்பதாரரின் வயது, தகைமை அவர் 1998.04.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மற்றும் 1990.04.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னராகவோ பிறந்தவராக இருத்தல் வேண்டும்.)

அரச சேவை அல்லது மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகும் வயது 35 வருடங்களாகும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக,

செயலாளர்,
நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு.

நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, யூன் 02.

06-108

---

திருத்தம்

2020.03.06 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2166 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 03-412/1 ஆம் இலக்க அறிவித்தலுடன் தொடர்புபட்டது.

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரம் II புள்ளிவிபர அலுவலர்கள் பொருட்டான முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2013 (2020)

First Efficiency Bar Examination for Statistical Officers of Grade II of the Department of Census and Statistics - 2013 (2020)

மேற்படி பரீட்சைக்காக விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதி 2020, யூன் 30 ஆக திருத்தப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

பணிப்பாளர் நாயகம்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்துாவ வீதி,
பத்தரமுல்லை.

06-112/1

